தங்காலை பிரதேச சபை – 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

தங்காலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் உபபிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, தங்காலை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நடைமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக புாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 108.89 மில்லியன் தொகை மற்றும் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 39.88 மில்லியனினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சரியான முத்திரைக் கட்டண வருமானத்தை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	தனதாக்கிய மற்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணிகள், கட்டிடங்கள், கொள்வனவு செய்திருந்த இயந்திர உபகரணங்கள் ரூபா 8.9 மில்லியன் தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காணி கட்டிடங்கள் மற்றும இயந்திர உபகரணங்கள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த 09 நிர்மாண வேலைகளுக்காக விலை விகிதாசாரங்களின் வித்தியாசம் காரணமாக மீண்டும் கிடைத்திருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 138,424 தொகை மீளாய்வாண்டின் மூலதனச் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால், மூலதனச் செலவு மற்றும் திரண்ட நிதியம் அந்த எண்ணிக்கையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	இவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்குக் காலப்பகுதிக்குரிய வருமானங்கள், செலவுகள் சரியாக சித்தரித்துக் காட்டக்கூடியவாறு கணக்குப் பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஈ)	வருமானம் என இனங்கண்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 3.37 மில்லியன் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால், மிகை அந்த எண்ணிக்கையால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.	இவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்குக் காலப்பகுதிக்குரிய வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(உ)	கூட்டுப் பெறுமதி ரூபா 275,980 தொகைக்கான செலுத்த வேண்டிய செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத ரூபா 275,980 இற்கான செலவுகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஊ)	சம்பளங்கள் தயாரிக்கும் போது கழிக்கப்பட்டிருந்த ரூபா 245,236 தொகை அரச பங்களிப்பு மீண்டுவரும் உதவியின் கீழ் மற்றும் சம்பளச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால், அந்தக் கணக்கு அந்த எண்ணிக்கையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	இவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணக்குக் காலப்பகுதிக்குரிய வருமானங்கள், செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(எ)	ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 281,766 தொகை அரச பங்களிப்பு மீண்டுவரும் உதவி என கணக்கீடு செய்திருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 281,766 தொகை ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

(ஏ)	சிட்டையிடப்பட வேண்டிய சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலாச் சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிடங்களின் வருமானத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 417,009 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 417,009 தொகை பெற வேண்டிய வருமானம் 2025 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

1.6.2 தொங்கல் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
முன்னைய ஆண்டுகளிலிருந்து காணப்படுகின்ற தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 6,248 தொகையினை சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தொங்கல் கணக்குகளில் காணப்படுகின்ற இனங்காணப்படாத செலவு மீதிக்குரிய சான்றுகளை இனங்காணப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.	தொங்கல் கணக்கின் மீதியை இனங்கண்டு விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.3 கணகக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
ரூபா 37.5 மில்லியன் தொகை பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக உரிய அட்டவணைகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்த.	நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படவில்லை எனவும், அந்த பதிவேடுகளை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகள், அட்டவணைகள் ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1)	2018 ஆண்டின் போது இனங்காணப்பட்ட முன்னேற்றப்பட்ட பிரதேங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வீதவரி கணப்பீட்டுக் கோப்புக்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என.	முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்காணப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை			
	(i) நிதிப் பிரமாணம் 371(2)	பதவி நிலை அல்லாத 05 உத்தியோகத்தர்களுக்கு 06 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 110,065 தொகைக்கான துணைக் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தது.	புதவியணி உத்தியோகத்தர் மூலம் முற்பணங்கள் வழங்கப்படல் மேற்கொள்ளப்படுகின்ற தென.	துணைக் கட்டுநிதிகள் வழங்குதல் நிதிப் பிரமாணங்களின் படி பதவியணி உத்தியோகத்தர்களுக்கு என மேற்கொள்ளப்பட வேண்டும்.
	(ii) நிதிப் பிரமாணம் 396(ஈ)	வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காத காலவதியாகிய கூட்டுப் பெறுமதி ரூபா 190,163 தொகைக்கான 21 காசோலைகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக் காத காலவதியாகிய காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2009 ஏப்ரல் 16 திகதிய 09/2009 இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரிவு 02(iv)	விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் காலத்தை உறுதிப்படுத்தாமல் 31 உத்தியோகத்தர்ள மற்றும் உழியர்களுக்கு கூட்டுத்தொகை ரூபா 264,463 தொகைக்கான மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.	விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி காலத்தை உறுதிப்படுத்தி மேலதிக நேர கொடுப்பனவுகள் செலுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கையின் பிரகாரம் விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் காலத்தை உறுதிப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 19.43 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 144.18 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபைச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	1,698,000	2,500,588	2,622,751	1,267,164	1,478,000	8,343,339	7,783,087	1,389,327
வாடகை	12,097,530	13,362,407	14,039,784	1,443,810	19,710,700	11,593,000	11,212,555	2,121,187
அனுமதிப் பத்திரக் கட்டணம்	4,147,100	11,247,285	9,295,584	3,713,244	1,776,100	8,685,034	7,454,016	1,761,543
ஏனைய வருமானங்கள்	17,938,039	36,783,195	39,428,864	688,864	23,583,000	26,108,412	23,139,379	3,334,533
மொத்தம்	**35,880,669**	**63,893,475**	**65,386,983**	**7,113,082**	**46,547,800**	**54,729,785**	**49,589,037**	**8,606,590**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	517 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி ரூபா 1.02 தொகை பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 150(1) இன் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி ரூபா 60,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும், நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்டத்தின் பிரிவு 150(1) பிரகாரம் பெற வேண்டிய வியாபார மற்றும் கைத்தொழில் வரி அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	பெற வேண்டிய ஏக்கர் வரி ரூபா 247,984 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.	காணி உரிமையாளரகளின் முகவரிகள் பதிவேடுகளில் காணப்படாததுடன், அந்த சிக்கலுக்கு விரைவில்	ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய காணிகளை சரியாக இனங்கண்டு சிட்டையிடப்பட

		தீர்வொன்று எடுக்கப்பட்டு நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	வேண்டியதுடன், நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	50 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 830,874 தொகை மற்றும் வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படுகின்ற 04 ஆதனங்களின் வாடகை ரூபா 651,499 தொகை பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	கடையறை வாடகை நிலுவை மீதியில் ரூபா 232,545 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளதுடன், வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படுகின்ற ஆதனங்களின் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக ஆதனங்கள் தொடர்பான கோப்புக்கள் தயாரிக்கப்பட்டு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது என.	சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 3.18 மில்லியன் தொகை மற்றும் ரூபா 113.57 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.	நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1.41 மில்லியன் தொகையும், முத்திரைக் கட்டணம் ரூபா 64.5 மில்லியன் தொகையும் அறவீடு செய்யப்பட்டதுடன், மீதித் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	பிரதான செயலாளர், ஆளுனர் மற்றும் காணிப் பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**சபையின் கருத்துரை**	**பரிந்துரை**
2024 ஆண்டிற்காக சபைக்கு சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான டெண்டர் அழைப்பு 03 பத்திரிகைகளில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டதுடன், அதற்காக ரூபா 77,242 தொகை செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், மீண்டும் அந்த அறிவித்தலை திருப்பி வெளியிடுவதற்காக ரூபா 24,633 இற்கான மேலதிக செலவொன்று சபை நிதியத்திலிருந்து	முதலாவது செய்தித்தாள் அறிவித்தலில் விலைகூறல் தொகை பிழையாக அச்சிடப்பட்டது எனவும், அதனை சரி செய்வதற்காக திருத்திய பத்திரிகை அறிவித்தல் வெளியிடுவதற்கு நேரிட்டது என.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கவனயீனத்தினால் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவிடப்பட வேண்டும்.

மேற்கொண்டிருந்தமையால், நிதிப் பிரமாணம் 127(7) பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த 05 கட்டிட வரைபுகள் தொடர்பாக அணவல் அங்கீகாரம் வழங்கும் கட்டணம், ஒழுங்குபடுத்தல் கட்டணம் மற்றும் இசைவுச் சான்றிதழ் கட்டணம் என கூட்டுத்தொகை ரூபா 1.72 மில்லியன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மூன்று கட்டிடங்களின் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட்டு இசைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் வியாபார அலுவல்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும், சபை அது தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உரிய கட்டணங்களில் ரூபா 70,808 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது எனவும், நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும், சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் செயற்பட வேண்டும்.	புதிய கட்டணம் விரைவாக அறவீடு செய்வதற்கும் சட்டரீதியான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 செயற்பாடுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
முன்னைய ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாணடின் போது 19 கைத்தொழில்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் எடுப்பதற்கு கைத்தொழிலாளர்களை ஊக்கவித்து சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 94,050 தொகை வருமானம் ஒன்றை இழந்திருந்தது.	ஒரு கைத்தொழில் மூடப்பட்டுள்ளது. ஏனைய 18 கைத்தொழில்கள் தொடர்பாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என.	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய 18 கைத்தொழில்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருமானம் விரைவாக சேகரிக்கப்பட வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் அனுபவிக்கப்படுகின்ற 109 காணிகள் மற்றும் மயானங்கள் மற்றும் 05 வாகனங்களின் உரிமையை சட்டரீதியாக சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.	காணிகள் மற்றும் மயானங்கனை உரித்தாக்கம் அலுவல்கள் மேற்கொள்ளப்படுவதுடன், வாகனத்தின் பதிவு செய்தல் உரிமை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபையினால் அனுபவிக்கப்படுகின்ற காணிப் பகுதிகள் மற்றும் மயானங்கள் மற்றும் வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்கிக்கொள்ள வேண்டும்.

3.5 செயற்திட்டங்கள், செய்பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்ள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் வருடாந்த பாதிட்டின் மூலம் ரூபா 200,000 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை.	புதிதாக சீசீடீவீ கமரா முறைமையொன்று பொருத்துவதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கையொன்று பெற்றுக்கொண்டு மேற்கொள்ளப்படும் என.	பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த வேண்டும். அவ்வாறின்றேல் திட்டங்களை பொருத்தமான விதத்தில் திருத்தப்பட வேண்டும்.

3.6 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான பவுசர் வண்டி திருத்த வேலை தொடர்பாக 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.4, 5.6.1(அ) மற்றும் 6.2.2 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இந்த திருத்த வேலைக்காக ரூபா 2.81 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்திருந்த போதிலும், குறிப்பிட்ட நிறுவனத்துடன் சேவை உடன்படிக்கையொன்றுக்கு அணுகியிருக்கவில்லை.	அடுத்த பெறுகை அலுவல்களின் போது வழிகாட்டலின் படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சேவை உடன்படிக்கைக்கு அணுக வேண்டும் எனவும்.	வழிகாட்டல் கோவை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 87 மற்றும் 127 ஆக காணப்பட்டமையால், 40 மிகைகளை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	மிகை ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துத் தரும்படி வேண்டப்பட்டுள்ளது என.	சபையின் பதவி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்த அளவு காலாண்டுக்கு ஒருமுறை அதாவது வருடத்திற்கு 04 முறை நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2024 ஆண்டில் 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.	2025 ஆண்டில் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒன்று வீதம் 04 கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	காலாண்டுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக குழுக் கூட்டங்கள் நடாத்த வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
செலவு விடயங்களிடையே ரூபா 22.15 மில்லியனிற்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன், செலவு விடயங்கள் தொடர்பாக சரியாக பாதீட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளாமை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.	புதிய ஊழியர்கள் சேர்த்தல் மற்றும் அவசர இடர் நிலைமை காரணமாக பாதை பராமரிப்பு அலுவல்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடு போதியளவாக காணப்படாமையாகும் என.	செலவுகளை சரியாக இனங்கண்டு தேவையான ஏற்பாடுகள் சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

4.3 சுற்றாடச் சிக்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 2.2 மற்றும் 2.3 இன் படி முறையே சேதனப் பசளை உற்பத்திக்காக எடுத்து வரப்படும் நகர திண்மக் கழிவுப் பொருள் அல்லது ஏனைய கழிவுப் பொருட்கள் சபையின்	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 2.3 இன் படி தற்போது திறந்த வெளியில் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படுதல் மேற்கொள்ளப்படவில்லை என.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியதுடன், திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான முறையான வேலைத்

	செயற்கள வளாகத்தில் திறந்த நிலையில் குவிக்கப்பட்டிருந்ததுடன், சேதனப் பசளை உற்பத்திக்கு எடுத்துவரப்புடுகின்ற கழிவுப் பொருட்கள் திறந்த வெளியில் எரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.		திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 3.1 இற்கு இணக்கமின்றி சேதனப் பசளையாக மாற்ற முடியாத திண்மக் கழிவுப் பொருட்களை திரண்ட வெளியில் குவிக்கப்பட்டிருந்ததுடன், மீள்சுழற்சி செய்யக்கூடிய பண்டங்களை வேறாக்கி மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை மாத்திரம் சுகாதார குப்பை தேக்கமொன்றிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	திண்மக் கழிவுப் பொருள் மொன்டோரியாவத்த திண்மக் கழிவுப் பொருள் நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது என.	சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டியதுடன், திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும்.